## மடுள்ள பிரதேச சபை

## மொனறாகலை மாவட்டம்

---------------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஜூலை 06 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஆகஸ்ட் 27 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 30 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, மடுள்ள பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையினால் மக்கள் வங்கியில் பேணப்பட்டுவரும் இலக்கம் 068-60-01-0000964-6 கொண்ட நிலையான வைப்புக் கணக்கு மீளாய்வாண்டு ஏப்ரல் 09 திகதி மூடப்பட்டிருந்ததுடன் ரூபா 1,856,944 இற்கான மீதி பிழையான முறையில் மூலதன வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. மூடப்பட்டிருந்த இந்த நிரந்தர வைப்புக் கணக்கின் மீதி மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் நிலையான வைப்பு மீதி ஒன்றென காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கிராமங்களுக்கு இடையிலான அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்டிருந்த வாகனத் தரிப்பிடத்தின் பெறுமதி ரூபா 875,288 தொகையினை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டடங்களை பெறுமதி மதிப்பீடு மேற்கொண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 731,969 இற்கான பலவின செலவுகள் தொடர்பாக கடன் கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

-------------------------------------------------------------------------------------

14 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 21,169,036 ஆகக் காணப்பட்டதுடன் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் அம்மீதி ரூபா 21,499,392 ஆகும்.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------------

(அ) பல வருட காலமாக அறவிடப்படாமல் காணப்பட்ட கடை வாடகை ரூபா 379,179 தொகை ஒன்று மீளாய்வாண்டு இறுதித் திகதி வரை அறவீடு செய்வதற்காக முறையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2006,2007,2008,2009 மற்றும் 2010 ஆகிய 05 ஆண்டுகள் தொடர்பாக சபையினால் செலுத்தப்பட வேண்டிய ரூபா 100,672 இற்கான கணக்காய்வுக் கட்டணத்தை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(இ) 2012 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டிருந்த பெறுமதி கூட்டிய வரி ரூபா 154,816 தொகையினை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்படாமல் வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

------------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 90,146,165 இற்கான 04 சொத்து விடயங்கள் ரூபா 246,160 இற்கான 01 பொறுப்பு விடயம் என்பனவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | |
| (i) பிரிவு 49 மற்றும் 52 | அங்கீகாரம் இன்றி நிர்மாணிக்கப்பட்டிருந்த 04 செலுத்துகை டவர்களை அகற்றுவதற்காக உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) பிரிவு 152 | சுபையின் அதிகாரப் பிரதேசத்தில் பல்வேறு கம்பனிகளின் மூலம் நிர்மாணிக்கப்பட்டிருந்த 04 செலுத்துகை டவர்களில் இருந்து வருடாந்த வரியொன்று மீளாய்வாண்டு இறுதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | |
|---|---|
| (iii) பிரிவு 158 மற்றும் 159 | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 2,120,859 இற்கான நிலுவை வருமானத்தை அறவீடு செய்திருக்கவில்லை. |
| (ஆ) உள்ளுராட்சி ஆணையாளரின் சுற்றுநிருபம் | |
| 1980 திசெம்பர் 31 திகதிய இலக்கம் 1980/46 கொண்ட சுற்று நிருபம் | சபைக்குச் சொந்தமான கடைகளுக்கான வாடகையினை பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) 2014 பாதீட்டு பிரேரணையின் கீழ் பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தை அமுல் நடத்துவதற்காக வழிகாட்டல் அடங்கிய 2014 மே 05 திகதிய இலக்கம் 1/2014 கொண்ட சுற்று நிருபத்தின் பந்தி 3 | சுற்றுநிருபத்தில் சுட்டிக்காட்டியுள்ள குறிக்கோள்களுக்கு மாற்றமான செயற்திட்டங்களுக்காக ரூபா 535,525 தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்தது. |

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந் ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,728,318 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் செலவை விஞ்சிய மீண்டுவரும் வருமானம் ரூபா 832,062 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் தேறிய அதிகரிப்பு ரூபா 1,896,256 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த தொகைகள் பின்வருமாறு

| | ரூபா |
|---|---|
| நீதிமன்றத் தண்டப்பணம் | 534,975 |
| முத்திரை கட்டணம் | 718,140 |

2.3 மிகை விதிப்புக்கள்

--------------------------------

1987 இன் 15 இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்டிருந்த மிகை விதிப்புக்கள் தொடர்பாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 32,697 இற்கான தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 செயற்பாட்டு திறமையின்மை

---------------------------------------------

சபையில் கடமையாற்றும் 22 ஊழியர்கள் தொடர்பாக 2014 ஜனவரி 01 திகதி முதல் 2014 திசெம்பர் 31 திகதி வரையான காலப்பகுதி தொடர்பாக அறவிடப்பட்டிருந்த ரூபா 865,171 இற்கான அரச சேவை சேமலாப நிதியத்தை குறிப்பிட்ட நிதியத்திற்கு செலுத்தப்படாமல் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ரூபா 752,446 தொகையும் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு ரூபா 112,725 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

--------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்